**அன்புடையீர், வணக்கம் !**

மனிதச் சமூகம் பல்வேறு கட்டங்களாக வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. வேட்டைச் சமூகம் முதல் நாகரிகச் சமூகம் வரையிலான வளர்ச்சியில் தொழில்நுட்பங்களிலும் அறிவுருவாக்கச் செயல்பாடுகளிலும் பெற்ற வளர்ச்சியானது ஒன்றையொன்று எதிர்த்து உருவான வளர்ச்சியாகக் காணத்தக்கதாக இருக்கிறது. தத்துவ வரலாற்றிலும் வாழ்வியல் சார்ந்த செயல்பாடுகளிலும் முரண்கள் இருந்திருக்கின்றன. அதுவே சமூக வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறதென்றால் அது மிகையாகாது. பொதுவாகத் தமிழர் வரலாற்றைச் சங்க காலத்திலிருந்து தொடங்குவது வழக்கமாகும். அக்காலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை சங்க இலக்கியங்கள் ஆகும். மன்னர்கள், குறுநில மன்னர்கள், சீறூர்த் தலைவர்கள் என்ற அடிப்படையில் இருந்த அரசாட்சிகள் அழிக்கப்பட்டு வேந்தராட்சிகள் நிலைநாட்டப்பட்டன என்பதைக் காணமுடிகிறது.

சங்க இலக்கியத்திலேயே மன்னர்களுக்கு இடையிலான போர்கள், அழிவுகள், காடுகளை அழித்து நாடுகளை உருவாக்குதல், வைதீக சமய உருவாக்கம், வேந்தர்களின் பெருக்கம் ஆகியவற்றைக் காணமுடிகிறது. மக்கள் வாழ்விலும் அத்தகை மாற்றங்களை எளிதாகக் காணமுடியும். அவற்றை அறியத்தருபவை இலக்கியங்கள் ஆகும். சமூக இயங்கியலோடு தொடர்புடைய ஒன்றாக இலக்கியங்கள் இருக்கின்றன. சமூகத்தை இலக்கியவாதிகள் தம் உணர்வுகளுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப வடிவமைக்கின்றனர். அதன்மூலம் அடுத்தடுத்தத் தலைமுறையினர் பாடங்கள் கற்றுக்கொள்ள வழி செய்கின்றனர்.

சங்க இலக்கியம் தனிநிலைச் செய்யுள்களால் ஆனது என்று குறிப்பிடுவது போல அதற்கடுத்த காலத்தில் உருவான காப்பியங்களைத் தொடர்நிலைச் செய்யுள்கள என்று குறிப்பிடுவதில் உள்ள கால வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, இலக்கிய ஆக்க வளர்ச்சி ஆகியனவற்றை அறிந்து கொள்ள முடியும். இன்றைய இலக்கியங்களின் வகைப்பாடுகள் கணக்கிறந்தனவாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வாழ்வியல் இலக்கியங்கள் என ஒன்றையொன்று முரண்படுகின்ற தளங்களிலிருந்து வெளிப்படுகின்றன என்பது திண்ணம். இந்த வகையில் சமூக இயங்கியலுக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் இடையிலான தொடர்பினை வலியுறுத்தும் வகையில் **“தமிழ் இலக்கியங்களும் சமூக இயங்கியலும்”** என்னும் பொருண்மையில் கருத்தரங்கம் நடத்துவதற்கு அருள் ஆனந்தர் கல்லூரி, தமிழ் இலக்கியத்துறை திட்டமிட்டுள்ளது. இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விளைவோர் கட்டுரைகள், அனுப்ப வேண்டப்படுகிறார்கள். ஆய்வு மாணவர்கள், பேராசிரியர்கள், ஆர்வலர்கள், முதுகலை மாணவர்கள் ஆகியோர் கட்டுரைகள் வழங்கலாம்.

**ஆய்வுக் கட்டுரைகள் அமைய வேண்டிய களங்கள்**

- சங்க காலமும் சமூக, பண்பாட்டு வளர்ச்சியும்
- காப்பியங்கள் காட்டும் சமூக இயக்கம்
- தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் உணர்த்தும் வரலாற்றுத் தேவை
- செவ்விலக்கியங்களில் காலமும் சமூக இயங்கியலும்
- பக்தி இலக்கியங்களில் வளர்ச்சி நிலைகள்
- நவீன இலக்கியங்களில் சமூக, பொருளாதார மாற்றங்கள்
- நாவல்கள், சிறுகதைகளில் கால மாற்றங்கள்
- தமிழ் நாடகங்களில் சமூக விழிப்புணர்வு சார்ந்த சிந்தனைகள்
- தமிழர்களின் தத்துவ வரலாற்றில் இயங்கியல் உரைகள், பதிப்புகள், ஒப்பாய்வுகள், மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்

இதுபோன்ற பிற தலைப்புகளிலும் ஆய்வுக்கட்டுரைகள் அமையலாம்.

**I. கட்டுரைகள் அமையப்பெறும் முறைகள்**

1. கட்டுரைகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இடம்பெறலாம்.
2. தமிழ்க் கட்டுரைகள் ஒருங்குறி எழுத்துருவில் (Unicode Fonts) 1.5 இடைவெளியுடன் சொற்கோப்பில் (MS Word) இல் தட்டச்சு செய்யப்பட்டு 6 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். ஆங்கிலக் கட்டுரைகள் டைம்ஸ் நியூ ரோமன் (Times New Roman) எழுத்துருவில் 12 அளவு 1.5 இடைவெளியுடன் தட்டச்சு செய்யப்பட்டு 6 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.
3. ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வுமுறைகளைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. கட்டுரைகள் ஆய்வாளரின் சொந்த முயற்சியினால் உருவாக்கப்பட்டனவாக அமைதல் வேண்டும்.
5. கட்டுரையின் இறுதியில் துணைநூற்பட்டியல் (ஆசிரியர் பெயர், நூலின்பெயர், பதிப்பக முகவரி, பதிப்பு ஆண்டு என்ற அமைப்பில்) இடம்பெறுதல் வேண்டும். (கவிஞர் சிற்பி, 2010. ப.78 என்ற அமைப்பில்) இடம்பெறுதல் வேண்டும்.
6. கட்டுரைகள் முன்னுரை, விவாதம், முடிவுரை ஆகியனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**II. கட்டுரையாளர்கள் கவனத்திற்கு:**

1. ஆய்வுக்கட்டுரைகள் மின்னஞ்சல் வழியில் சொற்கோப்பில் (Word File) அனுப்ப வேண்டும்.
2. கட்டுரைகளைத் திருத்தவோ, நீக்கவோ, பதிப்புக்குழுவினருக்கு அதிகாரம் உண்டு.
3. கட்டுரைத் தலைப்பின் கீழ் கட்டுரையாளரின் முழுப்பெயர் மற்றும் முகவரி இடம்பெறுதல் வேண்டும்.
4. கட்டுரையாளர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு தங்களது கட்டுரைகளை வாசித்தல் வேண்டும்.
5. கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலாதவர்களுக்கு நூல், சான்றிதழ் அஞ்சல்வழி அனுப்பி வைக்கப்படும். அஞ்சல் செலவினங்களுக்காக் கட்டுரையாக்கக் கட்டணத்துடன் ரூ. 150/- சேர்த்து அனுப்ப வேண்டும்.

**கட்டுரைகள் அனுப்ப இறுதிநாள் : 28.02.2025**

## கருத்தரங்கப் புரவலர்கள்

அருட்தந்தை முனைவர் ஜான் பிரகாசம் சே.ச. அதிபர்

அருட்தந்தை முனைவர் அ. அந்தோணிசாமி சே.ச.

செயலர், அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி) கருமாத்தூர்.

## கருத்தரங்கத் தலைவர்கள்

அருட்தந்தை முனைவர் ம. அன்பரசு சே.ச. (முதல்வர்)

முனைவர் அ. சுந்தர்ராஜ்

இணை முதல்வர், அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி), கருமாத்தூர்.

## ஒருங்கிணைப்பாளர்

முனைவர் ச. மணிமேகலா

தமிழ் இலக்கியத்துறைத் தலைவர், அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்.

## இணை ஒருங்கிணைப்பாளர்

முனைவர் சா. ஆரோக்கியம்

## பதிப்புக்குழு

திருமதி ச. ஜெகதீஸ்வரி

முனைவர் ஆ. முத்துலட்சுமி

முனைவர் சூ. ஆரோக்கியமேரி

திருமதி ப. மகேஸ்வரி

முனைவர் த. மலர்விழி

முனைவர் மூ. அய்யனார்

முனைவர் மா. உமாமகேஸ்வரி

முனைவர் கனிச்செல்வி

முனைவர் பா. ராஜன்

தமிழ் இலக்கியத்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி) கருமாத்தூர்.

## கருத்தரங்கத் தொடர்புக்கு

முனைவர் ச. மணிமேகலா – 93606 02094

முனைவர் சா. ஆரோக்கியம் – 93602 57803

திருமதி ச. ஜெகதீஸ்வரி – 97867 51856

முனைவர் ஆ. முத்துலட்சுமி – 89405436

முனைவர் சூ. ஆரோக்கியமேரி – 7448858893

## கருத்தரங்க ஆலோசகர்கள்

**முனைவர் க. பசும்பொன்**

முன்னாள் இயக்குநர் உலகத் தமிழ்ச்சங்கம், மதுரை. ஆய்வறிஞர்
பாரதவாணி இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்.
தகைசால் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.

**முனைவர் சூ. ஜா. இதயராஜா**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை –02.

**முனைவர் அ. ஆரோக்கியதாசு**

இளநிலை ஆராய்ச்சி அலுவலர்,
வரலாறு, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம்,
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை – 100.

**முனைவர் ஆ. அருணாசலம்**

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பெரியார் கல்லூரி,
தேவனாம்பட்டினம், கடலூர் – 001.

**முனைவர் ப. சாந்தி**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி,
திருவனந்தபுரம், கேரளா– 34.

**முனைவர் சு. விஜயலெட்சுமி**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி – 20.

கருத்தரங்க நாள்:

**14.03.2025**

கருத்தரங்கிற்கான கட்டுரைகள் வந்து சேரவேண்டிய இறுதிநாள்:

**28.02.2025**

கட்டுரையாளர்களுக்கான கட்டணம்:

பேராசிரியர்கள், ஆர்வலர்கள் – ரூ. 800/–

ஆய்வாளர்கள் – ரூ. 500/– பங்கேற்பாளர்கள் – ரூ. 200/–

வெளிநாட்டவர்கள் – $ 10 USD

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**aacseminar2025@gmail.com**

கட்டுரைக்கான கட்டணம் செலுத்தவேண்டிய கணக்கு எண்:

**A/c No. 233201000000010**

**Name: SELF FINANCE COURSE A/C**

**IFSC: IOBA0002332**

# அருள் ஆனந்தர் கல்லூரி
## (தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் ‘A’ தரச்சான்று பெற்றது

கருமாத்தூர் – 625 514 மதுரை மாவட்டம், தமிழ்நாடு




## தமிழ் இலக்கியத்துறை

நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்
## International Conference

# “ தமிழிலக்கியங்களும் சமூக இயங்கியலும் ”
# Tamil Literature and Social Dialectics

அறிவிப்பும் அழைப்பும்

**14.03.2025 வெள்ளிக்கிழமை**

அன்னை தெரசா அரங்கம்
அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி)
கருமாத்தூர், மதுரை –625 514 தமிழ்நாடு